23.03.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.164/2020 ) திரு.கருப்பசாமி.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) வாதியின் இடம் எனது இடத்திற்கு தெற்கு பக்கம் உள்ளதுஎன்றா சரிதான். எனது இடத்திற்கு வடபுறம் திருவேங்கடம் ரோடு செல்கிறது என்றால் சரிதான். சொத்து உள்ள ஊர் எனக்குசொந்த ஊர் கிடையாது என்றால் சரிதான்.நான் குடியிருக்கிற ஊர் வழக்கு சொத்து உள்ள ஊரிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரம்இருக்குமா என்றால் இருக்கும். சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு ஊரைப்பற்றியும் சொத்து பற்றிய விவரங்கள் தெரியாது என்றால் தெரியும். எனது பெயருக்கு 2019ல் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது இடம், வாதியின் இடம் 40 வருடங்களுக்கு முன்பு ஒரே நபர் வசம்இருந்து வந்த சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் பார்க்கவில்லை. வாதி 1981ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 2019ல் கிரையம் பெறுவதற்கு முன்பு வாதிகள் பெற்ற கிரையச்சொத்தில் விவசாயம் செய்து கொண்டு இருந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. வாதிகள் விவசாயம் செய்து வரும் விவரம் எனக்கு தெரியாது என்று சொல்லுவது சம்பந்தமாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. நான் கிரையம் பெற்ற இடத்தில் கட்டிடங்கள் கட்டியுள்ளோம் என்றால் இல்லை விவசாயம் தான் செய்து வருகிறேன். வாதிகள் நிலத்திற்கு வடக்கேயும்,கிழக்கிலும் எனது இடம் உள்ளது என்றால் சரிதான்.வாதிகள் நிலத்திற்கு கீழ்புறம் உள்ள எனது இடத்தில் செட் அமைத்துள்ளேனா என்றால் இல்லை. செட் எந்த சர்வே எண்ணில் அமைத்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை வேறுஇடத்தில் போட்டுள்ளேன். எனது இடத்திற்கு கீழ்புறம் வேறு நபர் இடம் உள்ளது என்றால் சரிதான். பெட்ரோல் பல்க் எந்த இடத்தில் போட்டுள்ளேன் என்றால் ஆசாரி இடத்திற்கு மேல்புறம் உள்ள இடத்தில் போட்டுள்ளேன். எனது இடத்திற்கு கீழ்புறம் வேறுநபர் இடம் என்பது ஆசாரி இடம் என்றால் சரிதான். ஆசாரிக்குப் பாத்தியப்பட்ட இடம் தாவா இடத்தின் சர்வே எண்ணின் ஒரு உட்பிரிவு என்றால் சரிதான். உட்பிரிவு எண் தெரியுமா என்றால் தெரியாது.

2) பெட்ரோல் பல்க் சர்வே எண் என்னவென்றால் ஞாபகமில்லை. வழக்கில் பிராது 2வது தபசில் சொத்தில் தான் நான்போட்டள்ள பெட்ரோல்பல்க் அமைந்துள்ளது

என்றால் வழக்குபோட்டுள்ள நம்பரில் இல்லை வேறுநம்பரில் உள்ளது. வழக்கு தாவாச்சொத்தாக என்ன என்ன சர்வே எண்ணாக போடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் செட் போட்டதாக சொல்லும் நிலத்தில் மேலக்கடைசியில் துார்ந்து போன கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த துார்ந்து போன கிணற்றுக்கு மேற்கு புறமாக எனக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றும் அது வேறு உட்பிரிவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது நிலத்திற்கு மேல்புறம் உள்ள ஓடை வரை அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது ஊரில் எனக்கு விவசாயம் உள்ளதா என்றால் இல்லை தாவா சொத்து கிராமத்தில் தான் விவசாயநிலம் உள்ளது. தாவாச்சொத்து கிராமத்தில் சொத்து வாங்குவதற்கு முன்பு எனக்கு விவசாய நிலம் பற்றி தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தவுடன் நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையில் வாதியின் ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணத்தில் வாதியின் நிலத்திற்கு பாதை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் பாதை காட்டப்பட்டுள்ளது எனது பத்திரத்தில் பாதை காட்டப்படவில்லை. வழக்கு சொத்திற்கு வில்லங்கம் போட்டுப்பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். எத்தனை ஆண்டுகளுக்கு பார்த்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. வில்லங்கச்சான்றிதழ் வாதி மற்றும் அவரது முன்னோர்கள் கிரைய ஆவணங்கள் விவரம் தெரிய வந்ததா என்றால் ஞாபகமில்லை. வாதியின் வழக்கில் முன் கிரையப்பத்திரமான 1977 ஆம் ஆண்டு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்திலும் வாதியின் நிலத்திற்கு பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் எனது பத்திரத்தில் காண்பிக்கப் படவில்லை.1977 ஆம் ஆண்டு பத்திரத்தில் மொத்தம் 4 ஏக்கர் 98 செண்டும் ஒரே நிலமாக இருந்து அதன் ஒரு பகுதி தெற்கு பக்கம் உள்ள நிலமான 2 ஏக்கர் நிலத்தை வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாதி கிரையம் பெறும் போது உட்பிரிவு செய்யப்படாமல் சர்வே எண்.271/3 என்று இருந்து வந்தது என்றால் ஞாபகமில்லை.

3) தாவா சர்வே எண்.271/3, 1977-க்கு முன்பாக ஆசாரி சமூகத்திற்கு பாத்தியப்பட்டவர்கள் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற முன் பாத்தியஸ்தர் ஆசாரி சமூகத்தினரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் தெரியாது. நான் மாரீஸ்வரி பாண்டியனிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். நான் கிரையம் பெறும் போது மாரீஸ்வரிபாண்டியனிடமிருந்து

முன்பத்திரம் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை மாரீஸ்வரி பாண்டியன் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தை பெற்றுள்ளேன். மாரீஸ்வரிபாண்டியன் கிரையப்பத்திரத்தில் முன் கிரையப்பத்திரம் ஆவண எண் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் நான் படிக்கவில்லை. பி.வா.சா.ஆ.4 ஆவணம் மாரீஸ்வரிபாண்டியன் கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். எப்படி நகல் போட்டேன் என்றால் பத்திர அலுவலகத்தில் கொடுத்தேன் அவர்கள் போட்டுக்கொடுத்தார்கள். அசல் ஆவணத்தை ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேடிப்பார்த்தேன் எங்குள்ளது என்று தெரியவில்லை. மாரீஸ்வரி பாண்டியன் 2 கிரையப்பத்திரங்கள் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. மாரீஸ்வரி பாண்டியனுக்கு எப்படி பாத்தியம் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி கிரையப்பத்திரத்தில் பாதை என்று காண்பிக்கப்பட்டுள்ளது சம்பந்மதாக எனக்கு கிரையம் கொடுத்த நபரிடமோ முன் பாத்தியஸ்திடமோ கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை எனது பத்திரத்தில் பாதை இல்லாததால் கேட்கவில்லை. பொதுவாக விவசாயம் நிலங்கள் ஏக்கர் கணக்கில் இருக்கும் போது தார் ரோடு அமையப்படுவது இல்லை என்றால் பொதுவாக பாதை போடமுடியாது. பொதுவாக சாலை ஓரத்தில் அமையப்பெற்றுள்ள நிலங்களின் வழியாக அதனை அடுத்துள்ள நிலங்களுக்கு சென்று வருவார்கள் என்றால் சரிதான். பொதுவாக 5 ஏக்கர் நிலம் இருந்தால் அந்த நிலத்தின் முடிவான பகுதிக்கு சென்று வருவதற்கு முடிவான இடம் வரை பாதை ஒதுக்கி சென்று வருவார்கள் என்றால் சரிதான் ஆனால் எனது பத்திரத்தில் பாதை காட்டவில்லை. வாதியின் பத்திரத்தில் துார்ந்து போன கிணறுக்கு மேல்புறம் உள்ள பாதை வழியாக என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பத்திரத்திலோ எனது முன் கிரையதாரர் பத்திரத்திலோ பாதை காண்பிக்கப்படவில்லை.

4) வாதிகளால் பாதை அனுபவிக்கப்பட்டு வருகிறதா இல்லையா என்று தெரியாமல் விசாரிக்காமல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் நான் ஆவணங்களை பார்த்து கிரையம் வாங்கினேன். தாவாச்சொத்தின் சர்வே எண்.ஒரே மூல உரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்றதால் அந்த சொத்தின் நடுவே பாதை அமைத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சொத்தின் ஊடே பாதை எதுவும் கிடையாது. வாதி அனுபவம் செய்து வந்த பாதையை நான் கிரையம் பெற்ற பின்னர் பாதையை

அழித்துவிட்டேன் என்றால் அழிக்கவில்லை. எனது எதிர்கட்சியாக கிராம புல வரைபடத்தில் பாதை இல்லை என்பதால் பாதை இல்லை என்பது எனது எதிர்கட்சி என்றால் சரிதான் எனது பத்திரத்திலோ எனது முன் பத்திரத்திலோ பாதை இல்லை. எனது எதிர்வழக்குரையுடன் எனது உத்தேச வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நான் எப்படி வரைய முடியும். இடத்தின் அமைப்பினை காட்டக்கூடிய உத்தேச வரைபடம் இருந்தால் அது என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம்காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 புலவரைடம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 எனது இடம் சர்சமுக்கமாக இல்லை என்றால் தவறு சர்சமுக்கமாகத்தான் உள்ளது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை காண்பித்து சர்சமுக்கமாக இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது இடத்தை சொல்ல முடியுமா என்றால் எது எனது இடம் என்று சொல்ல முடியாது. வாதியின் இடத்திற்கு முன்னால் வடபுறம் வாதியின் இடத்தை விட 2 மடங்கு இடம் உள்ளது என்றாலும் எனது இடத்தின் கிழமேல் அளவு எவ்வளவு வாதியின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் தெரியாது. வாதியின் இடத்திற்கு கீழ்புறமும் எனது இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் தான் வெடி தயாரிப்பு நிறுவனம் வைத்துள்ளேன் என்றால் இல்லை அதனை தாண்டி உள்ளது. எத்தனை அடி தள்ளி உள்ளது என்றால் சுமார் 150 அடி இருக்கும் என்னும் மீண்டும் சாட்சி 200 மீட்டர் இருக்கும் என்று கூறுகிறார். வெடி தயாரிப்பு நிறுவனம் சர்வே எண்.271 ல் உள்ளதா வேறு சர்வே எண்ணில் உள்ளது. வெடி தயாரிப்பு நிறுவனம் துவங்குவதற்கு பெறப்பட்ட சான்றில் சர்வே எண் துலங்கும் என்றும் அதை என்னால் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். வாதியின் இடத்திற்கு வடபுறம்உள்ள சர்வே எண்.271/2 ல் தான் துார்ந்து போன கிணறு உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.271/1,2,3 ஏ,3 பி,3 சி என்பது யூ.டி.ஆர் சர்வேயின் போது அனுபவதாரரின் அனுபவத்தை உறுதிசெய்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கிணறு இருந்த இடம் மட்டும் உட்பிரிவு 2 என்றும் மற்ற இடம் கிணற்றுக்கு கீழ்புறம் மற்றும் தென்புறம் உள்ள இடம்உட்பிரிவு 3 பி-ஆக பிரிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 2 கிரையப்பத்திரங்களை தான் ஒரே கிரையப்பத்திரமாக மாற்றியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த 2 கிரையப்பத்திரங்களில் உள்ள மால்களில் காண்பிக்கப்படவில்லை என்றால் காண்பித்துள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.03.2025.